துறையிலேயே வேலைக்கு இருப்பார்கள் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதனால் யாராவது பாதிக்கப் பட்டிருப்பதாக இருந்தால் தனியாக எழுதி அனுப்பலாம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இந்தத் திட்டத்தின் மூலமாக பத்திரங்களில் ஸ்டாண்டர்டு மை இல்லாத காரணத்தால் மங்கிப் போகக்கூடிய நிலைமை ஏற்படும் என்று பயப்படுகிறார்கள். அதனாலே கொஞ்சம் நாள் ஆகிவிட்டால் நகல் கிடைப்பதே அரிதாகி விடுமோ என்ற கவலை இருப்பதால் அரசாங்கம் இதுபற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த மை பற்றியெல்லாம் பரிசீலிக்கப்பட்டது. அப்போதைக்கப்போது என்னென்ன தேவை என்று அறிந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், சைதாப்பேட்டை.

*266 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கத்தின் பல ஊழல்களைப் பற்றி மதிப்பிற் குரிய கைத்தறி கூட்டுறவு உற்பத்தி விற்பனை இலாகா அமைச்சர் அவர்களுக்கு திரு. வி. கே. கோதண்டராமன், எம்.எல்.ஏ., அவர் கள் 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் கடைசி வாரத்தில் எழுதி அனுப்பியது சேர்ந்ததா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இது விஷயம் மாநில கைத்தறி நெறியாளரின் விசார ணையில் உள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தக் குற்றச்சாட்டு நீண்ட நெடுங்காலமாகவே இருந்து வரக்கூடிய மிகப் பெரிய குற்றச் சாட்டு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இது விஷயத் தில் துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் உறுப்பினர் அவர்கள் கொடுத்த குற்றச்சாட்டின் மீது உடனடியாக நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று கைத்தறி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன் பேரில் சொசைடியில் பல ஊழல்கள் இருக்கின்றன, கட்டடங்கள் கட்டியதில் ஊழல்கள் நடைபெற் றிருக்கின்றன என்பதெல்லாம் ஆராயப்பட்டு பின்னர் 'ஏன் அந்த சொசைடியைக் கலைக்கக்கூடாது ?' என்று கேட்டு 18—4—1967-ல்

1967 ஜூலை 11]

நோட்டீஸ் அனுப்பப்பட்டு சொசைடியைச் சேர்ந்த குழுவினர் பதிலுரை அனுப்பியிருக்கிறார்கள். இயக்குநரும், பதிவாளரும் கலந்து இதிலே நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Is it a fact that the orders were passed a few months ago and still they have not at all been implemented? Is the Government aware of the long gap between the passing and the implementation of the order?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நோட்டீஸ் முதலில் கொடுக்கப்பட்டது; அதையொட்டி சொசைடியின் பதிலும் வரப்பெற்றிருக்கிறது ; பதிலையொட்டி எடுக்கவேண்டிய நடவடிக்கையைப் பற்றி இயக்குநரும், பதிவாளரும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். விரைவில் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனி, அரக்கோணம்

* 267 வினா—திரு. எஸ். ஜே. ராமசாமி : மதிப்பிற்குரிய கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா : முற்பகல் 10-30

(அ) அரக்கோணத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனிக்கு (Southern Asbestos Company 1966) 1966-ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கத்தால் கடன் வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு தொகை ?

(உ) அத்தொகை எத்தனை வருட தவணை முறையில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) அரக்கோணத்தில் உள்ள சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனிக்கு சென்னை தொழில் முதலீடு கார்ப்பரேஷன் ரூ. 25 லட்சம் கடனாகக் கொடுத்திருக்கிறது.

(உ) அக்கடன் தொகை எட்டு ஆண்டு தவணையில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : 25 லட்சம் ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அந்தக் கம்பனியின் மூலதனம் எவ்வளவு என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அந்தக் கடன் இந்தப் புது அரசு பதவியேற்ற பின் கொடுத்ததா ? அல்லது அதற்கு முன்பு கொடுத்ததா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 12—7—1965-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது.